**நகராட்சி அலுவலகம்,**

**சாத்தூர்.**

**நாள்: 23.11.2024**

**----------------**

**<u>சாத்தூர் நகர்மன்றம் அவசரக் கூட்டம் அறிவிப்பு</u>**

**<u>கூட்டம் எண். 31</u>**

**நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் கார்த்திகை 10 ஆம் நாள் 2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 25.11.2024ம் தேதியன்று திங்கள்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

**நகர்மன்றத் தலைவர்**

**சாத்தூர் நகராட்சி.**

<u>பொருள் எண்.1</u>

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம் மற்றும் நகரம், மதுரை முதல் தூத்துக்குடி இடைய இருவழி ரயில் பாதை அமைக்கும் திட்டத்திற்கு சாத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான வார்டு – இ, பிளாக்-5, நகரளவு எ ண்.31, 77, 5/5, 5/6, 5/7, 5/9, 11/1 உள்ள நிலங்களை தென்னக ரயில்வே துறைக்கு நில மாற்றம் வழங்கிட முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சியர், விருதுநகர் அவர்களுக்கு வழங்க வேண்டி நகராட்சியில் தீர்மானம் பெற்றுத்தர சாத்தூர் வருவாய் வட்டாட்சியர் அவர்கள் கடிதம் வாயிலாக கோரியுள்ளார்.

நகரசார் ஆய்வாளரின் குறிப்பின்படி, தென்னக ரயில்வே துறைக்கு நிலமாற்றம் கோரிய புல எண்களின் விபரம்

| வார்டு – இ | பிளாக் - 5 | |
|---|---|---|
| நகரளவு எண். 31 | பரப்பு – 0.0350.0 | ஆணையாளர், சாத்தூர் நகராட்சி (தெரு) |
| நகரளவு எண். 77 | பரப்பு – 0.0250.0 | தெரு |

| வார்டு – இ | பிளாக் - 6 | |
|---|---|---|
| நகரளவு எண். 5/5 | பரப்பு – 1.6000.0 | ஆணையாளர், சாத்தூர் நகராட்சி |
| நகரளவு எண். 5/6 | பரப்பு – 0.0250.0 | ஓடை |
| நகரளவு எண். 5/7 | பரப்பு – 0.1400.0 | ஓடை |
| நகரளவு எண். 5/9 | பரப்பு – 0.1150.0 | பாதை |
| நகரளவு எண். 11/1 | பரப்பு –12.1350.0 | ஆறு |

என நகரளவை கணக்குகளில் தாக்கலாகியுள்ள மேற்படி இடங்களை தென்னக ரயில்வே துறைக்கு நிலமாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. சாத்தூர் இரயில்வே இருப்பு பாதை பாலம் எண்.BR NO.1584 பாலத்திற்கு கீழ் G1 பகுதியில் அமைந்துள்ள சாத்தூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட மயானம் செல்லும் பாதையில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது.
2. சாத்தூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட மயானம் செல்லும் பொதுமக்கள் பயன்படுத்தும் பாதையை பாதிக்காத வகையில் மேற்படி இடங்களை வழங்கலாம்.

(ந.க.எண்.546/2024/எப்1)

**தீர்மானம்**: அ) நகரளவை எண்.11/1, பரப்பளவு 12.1350.0 இடத்தில் சாத்தூர் இரயில்வே இருப்பு பாதை பாலம் (முதல்கன்) எண்.BR NO.1584 பாலத்திற்கு கீழ் G1 பகுதியில் அமைந்துள்ள சாத்தூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட பொது மயானம் செல்லும் பாதையினை பயன்படுத்துவதற்கு இந்நகர் பகுதியில் உள்ள அனைத்து கட்சியினர், அனைத்து சமுதாய தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் வியாபார சங்க பிரதிநிதிகள் ஆலோசனை மற்றும் கருத்துக் கேட்புக்கூட்டம் 25.11.2024 அன்று காலை 11.00 மணியளவில் நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து கூட்டப்பட்டதில், இதில் அனைவரும் பொது மயானப்பாதையினை பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் காலகாலத்திற்கும் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு இடையூறு ஏற்படாத வண்ணம் பயன்படுத்திக்கொள்ள மேற்கண்ட கூட்டத்தில் ஏகமனதாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

ஆ) நகரளவை எண்.11/1, பரப்பளவு 12.1350.0 இடத்தில் சாத்தூர் இரயில்வே இருப்பு பாதை பாலம் (முதல்கன்) எண்.BR NO.1584 பாலத்திற்கு கீழ் G1 பகுதியில் அமைந்துள்ள பொது மயானப் பாதையினை சாத்தூர் நகர்மன்றத்தின் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் காலகாலத்திற்கும் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு இடையூறு ஏற்படாத வண்ணம் பயன்படுத்திக்கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

நகர்மன்றத் தீர்மானம் எண்.521, நாள்: 25.11.2024

தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**
**ஆணையாளர்**

**சாத்தூர் நகராட்சி.**